# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.

**பதில் :** 1. காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனித நேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.
2. நவீனத் தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ்மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன.
3. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.
4. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.
5. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச் சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

2) தென்னிந்திய மொழிகளுக்காக கால்டுவெல்லின் பங்களிப்பினை நன்குப் புலப்படுத்துக.

**பதில் :** 1. "தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ-ஆரிய குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை" எனும் கோட்பாட்டை எப்.டபள்யூ.எல்லிஸ் உருவாக்கினார்.
2. ராபர்ட் கால்டுவெல், திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் எல்லிஸின் கோட்பாட்டை விரிவுபடுத்தினர்.
3. திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அடிப்படையான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினர்.

3) தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.

**பதில் :** 1. சி.வை. தாமோதரனார்,
2. உ.வே. சாமிநாதர்,
3. பரிதிமாற் கலைஞர்,
4. மறைமலையடிகள்,
5. சுப்பிரமணிய பாரதி,
6. ச.வையாபுரி,
7. கவிஞர் பாரதிதாசன்
ஆகியோர் தங்களின் எழுத்துகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்தனர்.

4) நீதிக்கட்சியால் நிறைவேற்றப்ப ட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

**பதில் :** நீதிக்கட்சி 1926இல் இந்துசமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில்களின் நிர்வாகக்குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமை பெறவும் வழிவகை செய்யப்பட்டது.

5) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. தமிழில் "திராவிடன்"
2. ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ்"
3. தெலுங்கில் "ஆந்திர பிரகாசிகா"

6) பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

**பதில் :** 1. 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில் பெண்களின் மோசமான நிலை குறித்து பெரியார் குரல் கொடுக்கத் தொடங்கினார்.

2. பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.
3. "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த பெரியார், அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளிலிருந்து எடுக்கப்பட்ட "வாழ்க்கைத்துணை" என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார்.
4. பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் "பெண் ஏன் அடிமையானாள்?" என்பதாகும்.
5. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.

7) சி.வை.தாமோதரனார் பதிப்பித்த நூல்களின் பெயர்களை எழுதுக.

**பதில் :** சி.வை.தாமோதரனார் பதிப்பித்த நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும்.

8) உ.வே.சாமிநாதர் பதிப்பித்த நூல்களின் பெயர்களை எழுதுக.

**பதில் :** உ.வே.சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானுறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

9) மதராஸ் ஐக்கிய கழகத்தை உருவாக்கியவர் யார்? அதன் நோக்கங்கள் யாவை?

**பதில் :** (i) மதராஸ் ஐக்கிய கழகத்தை உருவாக்கியவர் டாக்டர் சி.நடேசனார். இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறிய பின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது.
(ii) பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது. அவர்களைக் கற்க வைப்பது ஆகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து வாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது.

10) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்கிய தலைவர்களின் பெயர்களை எழுதுக.

**பதில் :** 1916 நவம்பர் 20 இல் டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயம்மாள் உட்பட முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்கினர்.

11) பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு பற்றி எழுதுக.

**பதில் :** (i) தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வட இந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது எனப் பெரியார் வலியுறுத்தினார்.
(ii) பண்டைய தமிழ்ச் சமூகம் திணைகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாக கூறினார்.
(iii) அம்முறை சுற்றுச்சூழல் வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்று கூறினார்.
(iv) வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற்கொள்ள வைத்தது.

12) பரிதிமாற் கலைஞர் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி தனக்குத்தானே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ் பெயரைச் சூட்டிக் கொண்டார்.
2. அவர் தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட நொடக்ககாலத் தமிழ் அறிஞர்களில் ஒருவராவார்.
3. தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கைலக்கழகம் தமிழை ஒருவட்டார மொழியென அழைக்கக்கூடாதென முதன்முதலாக வாதாடியவர் இவராவார்.
4. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார்.
5. மேலும் இவர், அதிக எண்ணிக்கையிலான நாவல்களையும், நாடகங்களையும் அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார்.

13) பெரியார் நடத்திய செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. விடுதலை
2. குடி அரசு
3. ரிவோல்ட்
4. பகுத்தறிவு
5. புரட்சி

14) மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** பட்டினப்பாலை மற்றும் முல்லைப்பாட்டு

15) தேவதாசி முறை பற்றி சிறு குறிப்பு வரைக.

**பதில் :** 1. தமிழ்நாட்டில் கடவுளுக்கு இறைப்பணி செய்வதற்காக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது. இவர்கள் தேவதாசிகள் எனப்பட்டனர்.

2. நாளடைவில் கடவுளுக்குச் செய்யும் சேவை என்ற நோக்கிலிருந்து இம்முறை பெரும் ஒழுக்கக் கேட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுவதற்கும் இட்டுச் சென்றது.

3. முத்துலட்சுமி அம்மையார் தேவதாசி முறை ஒழிப்பிற்கு அரும்பாடு பட்டு வெற்றி பெற்றார்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

**பதில் : தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம்:**

1. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.
2. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.
3. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின.
4. சமயச் சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**தமிழ் மறுமலர்ச்சியின் வளர்ச்சி:**

அச்சுத் தொழில் நுட்பத்தின் வருகை:

1. ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும்.
2. 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகமும், 1812இல் தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறளும் வெளியிடப்பட்டன.
3. இதன் விளைவாக மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

**தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைக் கண்டறிதல்;**

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரளார், உ.வே. சாமிநாதர் போன்றவர்கள் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர்.
2. சி.வை. தாமோதரனார் பளையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம் வீரசோழியம் மற்றும் பல அடங்கும்.
3. உ.வே. சாமிநாதர் பத்திற்கும் மேற்பட்ட செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றுள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை மற்றும் பல அடங்கும்.

விழிப்புணர்வு ஏற்படுதல்:

1. பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது. தமிழ் மக்களிடையே தங்கள் வரலாற்று மரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
2. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாகக் கண்டறிந்தனர்.

**தமிழின் தொன்மை நிலைநாட்டப்படல்:**

1. புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய எப். டபள்யூ. எல்லிஸ், தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ-ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார்.
2. ராபர்ட் கால்டுவெல் திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை விரிவுபடுத்தினார்.
3. கால்டுவெல் திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியொரு ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.
4. அறிவார்ந்த தமிழர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும் அடையாளம் கண்டுகொண்டனர்.
5. தமிழ் நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது.
6. இச்சிந்தனைகள் பி. சுந்தரனாரால் எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம்பெற்றுள்ள தமிழ்மொழி யாழ்த்துப் பாடலில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது

**தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்கு பங்களிப்பு செய்தவர்கள்:**

1. வள்ளலார் எனப்படும் ராமலிங்க அடிகள், ஆபிரகாம் பண்டிதர், சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர், திரு.வி. கல்யான சுந்தரம், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், சுப்பிரமணிய பாரதி, ச.வையாபுரி, கவிஞர் பாரதிதாசள் ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில் தங்களின் எழுத்துகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்.
2. " இதே சமயத்தில் ம.சிங்காரவேலர், பண்டிதர் அயோத்தி தாசர், பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆகியோர் சமூக ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட; ஒதுக்கப்பட்ட மக்களுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர்.
3. மேலும் தமிழ் மொழி இயக்கங்களான தனித் தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் இசை இயக்கம் போன்றவைகள் சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு ஆட்படாத தூய தமிழை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

17) நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.

**பதில் : நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலங்கள்:**

1. 1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட பல முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்க ஒருங்கிணைந்தனர்.
2. இதே சமயம் 1916 டிசம்பரில் விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணர் அல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது.
3. கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிகைகளை வெளியிட்டது.

**நீதிக் கட்சியின் ஆட்சி:**

1. மாகாண அரசுகளில் இரட்டையாட்சிமுறை அறிமுகம் செய்தபின்னர் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது.
2. நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது.
3. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920 முதல் 1937 வரை ஆட்சியில் தொடர்ந்து நீடித்தது.

**திட்டங்களும் செயல்பாடுகளும்:**

1. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது.
2. சாதிமறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக்கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர்.
3. ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.
4. நீதிக்கட்சி முதன்முதலாக பெண்கள் தேர்தல் அரசியலில் பங்கேற்பதை அங்கீகரித்தது.
5. 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் சட்டமன்ற பெண் உறுப்பினரானார்.
6. பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசு பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் இயற்றப்பட்டன.
7. அரசு அதிகாரிகளை தேர்வு செய்ய 1924ல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது.
8. நீதிக்கட்சி 1926 இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில்களின் நிர்வாகக் குழுக்களின் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

18) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

**பதில் : கோயில் நுழைவு உரிமைப் போராட்டம்:**

1. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார்.

2. சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது.

3. இதனை எதிர்த்து கேரளாவிலுள்ள வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற போராட்ட இயக்கத்திற்கு தலைமையேற்று வெற்றி பெற்றார்.

**சேரன்மாதேவி குருகுல நிகழ்ச்சி:**

1. சேரன்மாதேவியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் குருகுலப்பள்ளி ஒன்று நடத்தப்பெற்றது.

2. குருகுலப்பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்த பெரியார் இதனைக் கண்டித்து எதிர்த்துப் போராடினார்.

**பிராமணர் அல்லாதவர்களுக்கு இடஒதுக்கீடு:**

சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார்.

**பகுத்தறிவு கருத்துக்களை பரப்புதல்:**

1. பகுத்தறிவுக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காக பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் "குடி அரசு" ஆகும்.

2. பிராமணர் அல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களையும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துக்களையும் பெரியார் வழக்கமான கட்டுரைகளாக எழுதினார்.

**இந்தி எதிர்ப்பு:**

1. பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது தமிழ்நாட்டு அரசியலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

2. இந்த போராட்டத்திற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**குலக்கல்வித் திட்ட எறிப்பு:**

1. பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில்கல்வி பயிற்சித்திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையார் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக இருந்தது.

2. இதைக் குலக்கல்வித் திட்டம் என்று விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக அவர் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது.

**பெரியார் ஒரு பெண்ணியவாதி:**

1. பெரியார், குழந்தைத் திருமணத்தையும், தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

2. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்டது.

19) சுயமரியாதை இயக்கம் பற்றி விவரி.

**பதில் :** 1. சுயமரியாதை இயக்கம் அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ் நாட்டில் பிராமணர்கள் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது.

2. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது.

3. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்தி பிடித்தது.

4. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது.

5. இவ்வியக்கம் பெண்விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளைக் கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.

6. சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது.